
# கருப்பொருள் : தேசப்படங்களை வாசித்தல்

# 06

நிலத்தில் காணப்படும் எந்தவொரு பகுதியையாவது அளவுத்திட்டத்திற்கமைய தட்டையான ஒருதாளில் வரைந்து காட்டப்படுவது தேசப்படமாகும். தரை மேற்பரப்பு பற்றிய தகவல்கள் பல்வேறுபட்டன. அவற்றை எல்லாம் தேசப்படம் ஒன்றில் காட்டமுடியாது. எனவே பல்வேறு தேவைகளுக்காகப் பல்வேறு தேசப்படங்கள் வரையப்படுகின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக நீங்கள் பயன்படுத்தும் தேசப்படப் புத்தகம் (அட்லஸ்) விளங்குகிறது. நீங்கள் பயன்படுத்தும் தேசப்படப்புத்தகத்தை எடுத்து பல்வேறு தேவைகளுக்காக வரையப்பட்ட தேசப்படங்களை அவதானியுங்கள்




**வெனிசியுலாவின் தரைத்தோற்றத்தை விளக்கும் 6.1 தேசப்படம்**




**தென்னமெரிக்காவில் அரசியல் எல்லைகளைக் காட்டும் 6.2 தேசப்படம்**




**6.3 தொலமியின் தேசப்படம்**



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "





**தேசப்படம் 6.4 உல்லாசப் பயணத்தை விளக்கும் தேசப்படம்**

தரைத்தோற்றம், காலநிலை இயல்புகள், பல்வேறு மனித நடவடிக்கைகளை முன்வைப்பதற்காக புவியியலாளர்கள் தேசப்படங்களை அதிகம் பயன்படுத்தினர். எனினும் இன்று சமுகத்தில் வாழும் அதிகமானோர் தேசப்படத்தினால் அதிகளவு பயன்களைப் பெற்றுக்கொள்கின்றனர். தேசப்படம் என்பதற்கு பல்வேறு காலங்களில் பல்வேறு விளக்கங்கள் புவியியலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கங்களில் **J.D. ஜேம்ஸ்** என்பவரின் விளக்கமே சிறந்ததாகக் காணப்படுகிறது

**புவியின் குறித்த ஒரு பகுதியிலுள்ள பௌதிக, பண்பாட்டு அம்சங்களை விளக்கும் வகையில் ஓர் அளவுத்திட்டத்திற்கமைய வரைவது தேசப்படமாகும்.**

**பல்வேறு கருப்பொருள்கள் ஊடாகத் தேசப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.**





உரு 6.1 தேசப்படங்களின் பயன்பாடு

மாணவர்கள், ஆசிரியர்கள், சுற்றுலாப்பயணிகள், சாரதிகள், அபிவிருத்தி அலுவலர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகிய சமூகத்தில் உள்ள பல்வேறுபட்டவர்களும் தேசப்படங்களைப் பயன்படுத்துகின்றனர்.

**தேசப்படங்கள் பலருக்கும் நன்மை தரும் ஒரு கருவியாகும்.**

### செயற்பாடு




1. தேசப்படப் புத்தகத்தை எடுத்து உங்களுக்கு விருப்பமான ஐந்து தேசப்படங்களின் தலைப்புகளை எழுதுக.
2. கீழே தரப்படும் தனிநபர் ஒவ்வொருவருக்கும் தேசப்படத்தினால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் ஒவ்வொன்றை எழுதுக.

அ) மாணவர் ஆ) ஆசிரியர் இ) சுற்றுலாப்பயணி

ஈ) சாரதி உ) இராணுவ அதிகாரி



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**தேசப்படங்கள் பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுவதுண்டு அவற்றினை இங்கு நோக்கலாம்.**




**உரு 6.2 தேசப்படங்களை பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தல்**

மேலும் தேசப்படங்களை வரையும் போது அதில் அடிப்படையான சில அம்சங்கள் காணப்படும். அதனை இங்கு அவதானிப்போம்.





**உரு 6.3 தேசப்படங்களில் காணப்படும் அடிப்படை அம்சங்கள்**

இலங்கையின் நில அளவைத்திணைக்களத்தினால் 1980 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து மெற்றிக் அளவுத்திட்டத்தில் (1 : 50,000) இலங்கை முழுவதையும் 92 பகுதிகளாகப் பிரித்து இப்படங்கள் வரையப்பட்டுள்ளன.

## திசைகளும் அளவுத்திட்டமும்

இடவிளக்கப்படங்களில் திசையானது மிக முக்கியமானதாகும். எல்லாத் தேசப்படங்களிலும் வடக்குத் திசைமட்டும் அம்புக்குறிகளினால் காட்டப்படும்.





**உரு: 6.4 திசைகளை காட்டும் படம்**

**இடவிளக்கப்படங்கள் எல்லாவற்றிலும் வடக்குத் திசை மட்டும் காட்டப்படும்**

பிரதான திசைகள் நான்கினையும் உபதிசைகள் நான்கினையும் கீழ்வரும் அட்டணையின் மூலம் அறிந்துகொள்ளமுடியும்.

| பிரதான திசைகள் நான்கு | உபதிசைகள் நான்கு |
|---|---|
| வடக்கு | வடமேற்கு |
| தெற்கு | வடகிழக்கு |
| கிழக்கு | தென்மேற்கு |
| மேற்கு | தென்கிழக்கு |




**உரு: 6.5 திசைகளை காட்டும் முறை**


1 : 50,000 இடவிளக்கப் படங்களில் மூன்று முறைகளில் திசைகள் காட்டப்படும்.


1 உண்மை வடக்கு (TN)
2 காந்த வடக்கு (MN)
3 அளியடைப்பு வடக்கு (GN)

இம்மூன்று வகையான திசைகளிலும் இடவிளக்கப்படங்களில் திசையை உறுதிப்படுத்தப் பயன்படுவது அளியடைப்பு வடக்காகும்.



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

## செயற்பாடு






1. பின்வரும் அம்புக்குறிகளினால் காட்டப்பட்ட திசைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.




2. வரிப்படத்தில் தொடங்குமிடம் A எனக் கொண்டு ஏனைய வீதிகள் விரிந்து செல்லும் திசைகளை அறிந்து இடைவெளிகளை நிரப்புக.

1. B அமைந்திருப்பது A இற்கு ---------------திசையில்
2. C அமைந்திருப்பது A இற்கு ---------------திசையில்
3. D அமைந்திருப்பது A இற்கு ----------------திசையில்
4. E அமைந்திருப்பது A இற்கு ---------------திசையில்
5. F அமைந்திருப்பது A இற்கு ----------------திசையில்


செயற்பாடு

1. பின்வரும் படத்தின் துணையுடன் மேலும் திசைகள் சம்மந்தமாக அறிந்த கொள்ளுங்கள்.

i. விகாரை மருந்தகத்திற்கு கிழக்குத்திசையில் அமைந்துள்ளது. இதற்கேற்ப கீழே உள்ள இடங்கள் அமைந்துள்ள திசைகளை எழுதுக.

| | | |
|---|---|---|
| கோவில் | அஞ்சல் அலுவலகம் | பள்ளி வாசல் |
| தேவாலயம் | பாடசாலை | புகையிரத நிலையம் |
| சந்தை | மருந்தகம் | விகாரை |

ii. சந்தை
iii. பாடசாலை
iv. புகையிரத நிலையம்
v. தேவாலயம்
vi. பள்ளிவாசல்
vii. கோவில்
vii. அஞ்சல் அலுவலகம்
xi. விகாரை






" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "


**திசை குறித்த இடத்தின் அமைவிடத்தைக் கண்டறிய உதவுகிறது.**

## அளவுத்திட்டம்

பிரதேசத்தில் உள்ள அளவுக்கு ஏற்பத் தேசப்படங்களைத் தாள்களில் வரைய முடியாது. ஆகவே நாங்கள் படங்களை வரையும் போது அளவுத்திட்டங்களைப் பயன்படுத்த வேண்டும். எங்களுக்குத் தேவையான தகவல்களுக்கேற்ப வரையும் தேசப்படம் பெரியனவாகவோ, சிறியனவாகவோ அமையலாம். அதன் பொருட்டு பல்வேறு அளவுத்திட்டங்களைப் பயன்படுத்த முடியும்.

**இலங்கை நில அளவைத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் சகல இலங்கை இடவிளக்கப்படங்கள் யாவும் 1:50,000 எனும் அளவுத்திட்டத்திலேயே வரையப்படுகின்றன.**

அளவுத்திட்டத்திற்கு ஏற்ப வரையும் படங்களை எமது தேவைக்கேற்ப பெரிதாக்கவும் சிறிதாக்கவும் முடியும்.





**உரு 6.6 பல்வேறு அளவுத்திட்டங்களைக் காட்டும் படம்**



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**செயற்பாடு**



1. 20 m , 10 m நீள அகலமுள்ள அறைக்கு 1 cm = 2 m அளவுத்திட்டத்தில் ஒரு அடைப்பினை ஆக்குக.
2. உமது வகுப்பறையின் நீள, அகலங்களை அளந்து (1 cm = 5 m) அளவுத்திட்டத்தில் வரைக.
3. உமது வீட்டின் நீள, அகலங்களை அளந்து முதலாம் வினாவில் குறிப்பிட்ட அளவுத்திட்டத்திற்கேற்ப அடைப்பு ஒன்றினைத் தயாரிக்குக.
4. 6.6 உருவில் காட்டப்பட்டுள்ள முறையில் நீங்கள் வரைந்த அளவுத் திட்டத்தைப் பயன்படுத்தி சிறிதாகவோ, இருமடங்காகப் பெருப்பித்தோ வரைக.

அளவுத்திட்டத்தின் நன்மை என்னவெனில் தேசப்படத்தில் காட்டப்படும் இரு இடங்களுக்கிடையிலான தூரத்தை இலகுவாக அளவிட்டு அறிந்து கொள்ளமுடியும். உதாரணமாக ஒரு சென்ரி மீற்றர் இரண்டு கிலோமீற்றர் என்ற அளவுத்திட்டத்திற்கு வரையப்பட்ட படத்தில் இரு இடங்களுக்கிடையிலான தூரம் படத்தில் 5 சென்ரிமீற்றர் ஆயின் அது உண்மையான பிரதேசத்தில் 10 கிலோமீற்றர்களாகும்.

எல்லாத் தேசப்படங்களிலும் சரியான அளவினைக் காட்டுவதற்காகவே அளவுத்திட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

## நிறங்களும் குறியீடுகளும்

புவியியல் பாடத்தில் நிறங்களும் குறியீடுகளும் எனும் பாட அலகை வகுப்பறையில் கற்பதற்கு முன் தேசப்படப்புத்தகம் ஒன்றை அவதானித்து உயர்தரத்தில் கல்வி கற்கும் தனது சகோதரியிடம் அதிலுள்ள நிறங்களும் குறியீடுகளும் சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக சகோதரிகள் இருவர் வீட்டில் சம்பாஷணையில் ஈடுபடுகின்றனர்.

**துவாரகா**

அக்கா நிறங்கள், குறியீடுகள் எனும் பாடம் நாளை வகுப்பறையில் நடைபெற இருக்கிறது அதனை எனக்குச் சற்றுத் தெளிவு படுத்துங்கள்.

**நிரா**

முதலில் நீங்கள் இந்தத் தேசப்படப் புத்தகத்தை (அட்லஸ்) எடுத்து இலங்கையின் தரைத்தோற்றமும் வடிகாலமைப்பும் படத்தை அவதானியுங்கள். அதிலுள்ள நிறங்கள் என்னவென்று கூறுங்கள்.

**துவாரகா**

இலங்கையின் தரைத் தோற்றப்படத்தைப் புரட்டினார். அந்த தேசப்படத்தில் இளம் பச்சை, இளங்கபிலம், கபிலம் ஆகிய நிறங்கள் இருக்கின்றன. கடல் நீல நிறத்திலும் கடும் நீல நிறத்திலும் நிறந்தீட்டப்பட்டுள்ளது.

**நிரா**

இப்பிரதேசத்தில் பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. நீர்ப்பாசன நடவடிக்கைகளும் பல்வேறு உயர் நில அம்சங்களும் காணப்படுகின்றன. பயிர்ச்செய்கை நிலங்கள் பச்சை நிறத்தினால் காட்டப்படும். நீர்ப்பாசன நடவடிக்கைகள் நீலநிறத்தினால் காட்டப்படும். உயர்நிலங்கள் கபில நிறத்தில் காட்டப்படும்.

**துவாரகா**

ஆம், அக்கா நாம் இந்த நிறங்களால் காட்டப்பட்டுள்ள அம்சங்களை அறிந்து கொள்வது எப்படி?

**நிரா**


மேற்கூறிய விடயங்களைப் போலவே பிரதேச எல்லைகளும் வழிபாட்டுத்தலங்களும் சேவை வழங்கும் நிலையங்களும் ஒரு பிரதேசத்தில் காணப்படுகின்றன. தேசப்படத்தை நன்கு அவதானியுங்கள். தேசப்படத்தில் ஒரு பக்கத்தில் குறியீடுகள் இருக்கின்றன. குறியீடுகள் என்பது தேசப்படத்தில் நிறம் எழுத்து, மற்றும் வேறு குறியீடுகள், கூறும் விடயங்களை விளக்கி கூறும் அட்டவணையாகும். அதில் நிலத்தின் உயரமும் கடலின் ஆழமும் குறிப்பிட்டு இருக்கின்றதல்லவா?

இவை தேசப்படப்புத்தகங்களில் குறியீடுகளால் காட்டப்படுகின்றன. இத்தேசப்படப் புத்தகத்தை தற்போது நீர் அவதானிக்கும் போது பல்வேறு வகைக் குறியீடுகள் இடம்பெற்றுள்ளதை அறிந்து கொள்வது தேசப்படம் பற்றி கற்கின்றபோது உதவியாக இருக்கும். இதற்குரிய விளக்கத்தினை நில அளவைத் திணைக்களத்தினரால் வெளியிடப்பட்ட நிறங்களும் குறியீடுகளும் எனும் பட்டியலை அவதானிப்பதன் மூலம் அறிந்துகொள்ளமுடியும்.

**துவாரகா**

அக்கா நீங்கள் கூறிய விளக்கத்தினால் நிறங்கள், குறியீடுகள் பற்றிய பாடத்தை இனிமேல் இலகுவாகக் கற்கக்கூடிய அறிவு கிடைத்துள்ளது.


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "




**தேசப்படம் 6.5 இலங்கையின் தரைத்தோற்றமும்**

| |
|---|
| தேசப்படங்களில் பலவகை நிறங்கள்,எழுத்து, மற்றும் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. |

| |
|---|
| தேசப்படங்களில் நிறங்கள், எழுத்து, மற்றும் குறியீடுகளை அறிந்து கொள்ள படக் குறிவிளக்கம் உதவுகின்றது. |


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

# இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில்




**தேசப்படம் 6.6 இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழில்**



" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "


கீழ்க்காட்டப்பட்டுள்ள படங்களை அவதானிப்பதன் மூலம் நிறங்கள், குறியீடுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அறிந்துகொள்ளலாம்.




**தேசப்படம் 6.7 தேசப்படங்களில் பல்வேறு வகையான நிறங்களும் குறியீடுகளும்**


இலங்கையின் நிளஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இடவிளக்கப்படங்கள் யாவும் 1 : 50,000 அளவுத்திட்ட படங்களாகும். இதில் பலதகவல்களை வாசித்து அறிந்து கொள்ள முடியும். இப்படங்களில் உபயோகிக்கப்பட்ட நிறங்களையும் குறியீடுகளையும் பின்வரும் பட்டியல் மூலம் அறிந்துகொள்ளலாம்.

# 1 : 50,000 மெற்றிக் தேசப்படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளும் நிறங்களும்




மூலம் : இலங்கை நில அளவைத்திணைக்களம்

**செயற்பாடு**



உமக்குத்தரப்பட்டுள்ள இடவிளக்கப்படங்களை அவதானித்து கீறிட்ட இடங்களை நிரப்புக.


1. மாகாண எல்லையைக் காட்ட ----------------------- நிறம் பயன்படுத்தப்படும்.
2. மாகாண எல்லையைக் காட்டப் பயன்படுத்தப்படும் குறியீட்டினை வரைக.
3. சிறு வீதியைக் காட்ட -------------------------- நிறம் பயன்படுத்தப்படும்.
4. நெற்செய்கையைக் காட்ட --------------------- நிறம் பயன்படுத்தப்படும்.
5. தெங்குப் பயிர்ச்செய்கையைக் குறிக்கும் குறியீட்டினை வரைக.
6. இறப்பர் பயிர்ச்செய்கையைக் குறிக்கும் குறியீட்டினை வரைக.
7. புகையிரதப் பாதையைக் காட்டும் குறியீட்டினை வரைக.
8. விகாரையைக் காட்டும் குறியீட்டினை வரைக.
9. பாடசாலையினைக் காட்டும் குறியீட்டினை வரைக.
10. வைத்தியசாலை சுற்றுலா விடுதியைக் காட்டும் குறியீட்டினை வரைக.

**வீதிகள்**

தேசப்படத்தில் காட்டப்படும் இன்னுமோர் முக்கிய விடயம் வீதிகளாகும். இவ்வீதிகளைக் காட்டுவதற்கு சிறப்பான தேசப்படங்கள் உள்ளன. எனினும் 1:50,000 மெற்றிக் தேசப்படங்களில் சகல சிறுவீதிகளும் காட்டப்பட்டுள்ளமை விஷேட பண்பாகும். வீதிகளை தேசப்படத்தில் அவதானிக்கும் போது அதனுடன் இணைந்ததாக பல்வேறு குறியீடுகளும் இருப்பதை அவதானிக்கலாம். இவை பாலம், மதகு, புகையிரத குகை வழி நிலையம், புகையிரதக் கடவை போன்ற அவ்வாறான அம்சங்களாகும்.

மெற்றிக் தேசப்படங்களில் காட்டப்படும் வீதிகளின் வகைகள் பின்வருமாறு.

- பிரதான வீதி
- சிறு வீதி
- வண்டிப்பாதை
- ஒற்றையடிப்பாதை
- புகையிரதப்பாதை




தேசப்படம் 6.8 மாத்தளை





தேசப்படம் 6.9 தம்புள்ளை




" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**செயற்பாடு**



1. மாத்தளைத் தேசப்படத்தில் உள்ள பாதை வகைகளைப் பெயரிடுக.
2. கல்கமுவ நகரபிரதேசத்தில் சதுரமிடப்பட்டிருக்கும் பகுதியில் காணப்படும் கலாச்சார அம்சங்கள் யாவை?
3. புகையிரதத் தரிப்பிடம் நகரத்தின் எத்திசையில் அமைந்துள்ளது?
4. பிரதேசத்தில் அதிகமாக் காணக்கூடிய பாதை வகையைப் பெயரிடுக.
5. கல்கமுவ நகரத்திலிருந்து மூன்று பிரதான பாதைகள் பரந்து செல்கின்றன. நகரத்திலிருந்து கிழக்குத் திசையாகப் பரந்து செல்லும் பாதையின் நீளத்தை கிலோமீற்றரில் தருக.

**செயற்பாடு**



தேசப்படம் 6.8, 6.9 என்பவற்றை நன்கு அவதானிக்கவும்.

1. மாத்தளைத் தேசப்படத்தில் பிரதான சந்திக்குடியிருப்பு யாது?
2. குளக்குடியிருப்பில் காணக்கூடிய பிரதானபண்புகள் இரண்டினை எழுதுக.
3. தம்புள்ள தேசப்படத்தில் காணக்கூடிய பயிர் வகைகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. களுகங்கை ஊடாகச்செல்லும் நிர்வாக எல்லை யாது?

## குடியிருப்புக்கள்

மனிதர்கள் கூட்டாக ஓரிடத்தில் வசிக்குமிடம் குடியிருப்புக்கள் எனப்படும். இக்குடியிருப்புக்கள் நாளாந்த ஜீவனோபாய நடவடிக்கைகளுக்கேற்ப மாறுபடும்.

**இலங்கையில் காணப்படும் குடியிருப்புக் கோலங்கள் பின்வருமாறு**

- சந்திக் குடியிருப்பு
- குளக்குடியிருப்பு
- தோட்டக்குடியிருப்பு
- மீனவக்குடியிருப்பு
- நேர்கோட்டுக்குடியிருப்பு
- சிதறல் குடியிருப்பு

## நதிகளும் நீர்நிலைகளும்


அனைத்து நதிகளும் நீர்நிலைகளும் தேசப்படங்களில் நீல நிறத்தில் காட்டப்படும். நதிகள்,கடல்கள், குளங்கள், நீர்பாசனக்கால்வாய், சேற்று நிலங்கள் என்பன நீல நிறக் குறியீடுகளால் காட்டப்படும்.

**தேசப்படங்களில் நீர்நிலைகளுடன் தொடர்புடைய சகல அம்சங்களும் நீலநிறத்தினால் காட்டப்படும்**

## சமவுயரக்கோடுகள்

புவி மேற்பரப்பில் எல்லா இடங்களும் சம அளவான உயரமுடையன-வாகக் காணப்படுவதில்லை. பாடசாலை அமைந்துள்ள இடம், பாடசாலைத் தோட்டம், வீட்டுத்தோட்டம், அருகிலுள்ள பிரதேசங்களில் நடமாடும் போது உயர் மலைகள், சமவெளிகள், சாய்வுகள் என்பன பல்வேறு வகையான உயர அடிப்படையிலே காணப்படுவதை நீங்கள் காணலாம். புவியில் உள்ள உயர வேறுபாடுகளைக் காட்டுவதற்கு தேசப்படங்களில் சமவுயரக்கோடுகள் பயன்படுகின்றன.

**சமவுயரக்கோடு என்பது சமமான உயரமுடைய இடங்களை இணைத்து வரையப்படும் கோடாகும்.**




இவ்வாறு வரையப்படும் கோடுகளின் ஒவ்வொரு புள்ளிகளிலும் சமமான உயரங்கள் காணப்-படும்.

பிரதான சமவுயரக்கோடுகள் கடும் கபில நிறத்-தினாலும் இடையிலுள்ள கோடுகள் இளம் கபில நிறத்தினாலும் தேசப்படங்களில் காட்டப்படும். சமவுயரக்கோடுகள் பரந்துள்ள முறைக்கேற்ப புவியின் பௌதிக இயல்புகளை அறிந்து கொள்ள முடியும்.

1 : 50,000 தேசப்படங்களில் இக்கோடுகள் 20 மீற்றர் இடைவெளிகளில் வரையப்படும். இவற்றில் இலக்கங்களை எழுதும் போது உயரத்தை நோக்கியே எழுதப்பட வேண்டும்.

**தேசப்படங்களில் உள்ள உயரமான இடங்களையும் நிலவுருவங்களையும் அறிந்து கொள்ளுவதற்கு சமவுயரக் கோடுகளை அமைத்துக் கொள்வது இலகுவான முறையாகும்**


" இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக "

**செயற்பாடு**



உமக்குத் தரப்பட்டுள்ள இடவுயரப் புள்ளிகளை அவதானித்து சமமான இடஉயரங்களை இணைத்து சமவுயரக்கோடுகளை வரைந்து காட்டுக.

.100

.100 .100

.200 .200

200

.300

.200 .300

.400

.100 .400 .400 .200

.300

.300

.400 .200

.400

.100 .300 .100

.200


.100


.100

.100

**சாராம்சம்**

- **தேசப்படங்கள் தரைமேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியைக் காட்டுவதாக அமையும்.**
- **பல்வேறு வயையான தேசப்படங்கள் உண்டு**
- **பல்வேறு தேவைகளுக்கும் பல்வேறு வகையான தேசப்படங்கள் வரையப்படும்.**
- **தேசப்படங்களில் முக்கியமான பல அம்சங்கள் உண்டு.**
- **தேசப்படங்களில் பல்வேறு நிறங்களும் குறியீடுகளும் காணப்படும்.**
- **தேசப்படங்களில் வீதி அமைப்புக்களும் குறியீடுகளும் பிரதான அம்சங்களாகும்.**
- **உயரங்களை அறிந்து கொள்வதற்கும் நிலத்தோற்றங்களை அறிந்து கொள்ளவும் சமவுயரக்கோடுகள் உதவுகின்றன.**
- **தேசப்படங்களை பல வகையான அளவுதிட்டங்களின் அடிப்படையில் வரையலாம்.**
- **தேசப்படங்களை வாசிப்பதனால் அதிலுள்ள முக்கியமான பண்புகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.**


ஆசியா - தரைத்தோற்றம்
நில உயரம்
கடல் ஆழம்
ஐரோப்பா
ஆப்பிரிக்கா



ஐ ரோ ப் பா
ஆ சி யா
அத்திலாந்திக் பெருங்கடல்
இந்துப் பெருங்கடல்
மீற்றர்
3000
2000
1500
1000
400
200
0
200
2000
4000
6000
ச ஹா ரா
எகிப்து
நுபியா
பெஸ்லான்
கொங்கோ
மொறிசியஸ்